00023

இலங்கை திறந்த பல்கலைக்கழகம்

கல்விப் பீடம்

முன்பள்ளி கல்விச் சான்றிதழ் நிகழ்ச்சித்திட்டம் **2019/2020**

**EPC1237/ ESC1137** – சுற்றாடலை ஆராய்தலும் ஒன்றிணைந்த அணுகுமுறையும்

காலம்: இரண்டு (02) மணித்தியாலங்கள்

பகுதி **I** இல் அனைத்து வினாக்களுக்கும் பகுதி **II** இல் விரும்பிய மூன்று (03) வினாக்களுக்கும் விடை தருக.

திகதி : **18/06/2023** நேரம்: பி.ப 01.30 – பி.ப 03.30

## பகுதி I

1. 'உருவாக்கப்பட்ட சுற்றாடல்' என்பதனால் நீங்கள் கருதுவது யாது?
2. "ஆராய்தல்" என்னும் பதத்தினை விளக்குக.
3. முன்பள்ளி பிள்ளைகளின் இயல்புகள் மூன்றினைக் (03) குறிப்பிடுக.
4. முன்பள்ளிப் பிள்ளைகளுக்கு கற்பிப்பதற்கு பயன்படுத்தக்கூடிய பௌதீக வளங்கள் ஐந்தினை (05) பட்டியலிடுக.
5. உயிருள்ளவை, உயிரற்றவை என்பவற்றை அட்டவணையின் மூலம் வேறுபடுத்திக் காட்டுக.
6. முன்பள்ளியில் "கண்காட்சி மூலை" தொடர்பாக கருத்திலெடுக்க வேண்டிய காரணிகள் இரண்டினை (02) சுருக்கமாக விளக்குக.
7. இளம் பிள்ளைகளுக்கான இடைநிலை கணிப்பீட்டிற்கான முறைகள் இரண்டினை (02) எழுதுக.
8. 'ஒன்றிணைந்த கற்பித்தல் அணுகுமுறை' என்னும் பதத்தினை வரையறுக்குக.

(05 x 08 = 40 புள்ளிகள்)

## பகுதி II

9.

i. சுற்றாடல் என்னும் பதத்தினை வரையறுக்க.

(05 புள்ளிகள்)

ii. சுற்றாடலை எவ்வாறு வகைப்படுத்த முடியும்?

(05 புள்ளிகள்)

iii. முன்பள்ளி பிள்ளைகளுக்கு ஏன் சுற்றாடலைப் பற்றிக் கற்பிக்க வேண்டுமென காரணிகளை பட்டியலிடுக.

(10 புள்ளிகள்)

10.

i. இளம் பிள்ளைகளுக்கு முன்பள்ளி ஆசிரியரொருவர் எவ்வாறு எம்மைச் சூழவுள்ளவர்களை அறிமுகம் செய்ய முடியும்.

(08 புள்ளிகள்)

ii. "தபால் காரன்" என்னும் தலைப்பில் ஒன்றிணைந்த அணுகுமுறையிலான பாடமொன்றினை திட்டமிடுக.

(12 புள்ளிகள்)

11. "தண்ணீர்" என்னும் தலைப்பில் ஒன்றிணைந்த அணுகுமுறையில் முன்பள்ளிப் பிள்ளைகளுக்கு கற்பித்தலுக்கான பின்வரும் தலைப்புக்களில் பொருத்தமான செயற்பாடுகளை விபரிக்க.

i. முன்மொழித் திறன்கள்
ii. முன் கணித எண்ணக்கருக்கள்
iii. சுற்றாடலை ஆராய்தல்
iv. அழகியல், ஆக்கத்திறன் செயற்பாடுகள்

12.

i. ஒன்றிணைந்த அணுகுமுறைக் கற்பித்தல், பாட ரீதியான கற்பித்தல் என்பவற்றிற்கிடையிலான வேறுபாடுகளை அட்டவணைப்படுத்துக.

(10 புள்ளிகள்)

ii. ஒன்றிணைந்த அணுகுமுறைக் கற்பித்தல் அணுகுமுறையின் அனுகூலங்களை விளக்குக.

(10 புள்ளிகள்)

13. கீழுள்ளவற்றில் ஏதாவதொரு கருப்பொருளை தெரிவு செய்க.

(i) பழங்கள்
(ii) பூக்கள்
(iii) மழை நாள்

நீங்கள் தெரிவு செய்த தலைப்பில் ஒன்றிணைந்த அணுகுமுறையில் பாடமொன்றை எழுதுக. உமது திட்டமிடல், மொழி, கணிதம் மற்றும் ஒரு பாடம் என்பவற்றை உள்ளடக்க வேண்டும்

(20 புள்ளிகள்)

*பதிப்புரிமை பெற்றது*